**கொட்டகல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கொட்டகல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொட்டகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான

ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,100,415 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,779,040 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I | வீதவரி மற்றும் வரிக்காக மதிப்பீட்டு பெறுமதியை மிகைத்து 141 சதவீதத்தினாலும் ஏனைய வருமானத்திற்காக மதிப்பீட்டு பெறுமதியை மிகைத்து 563 சதவீதத்தினாலும் பட்டியலிடப்பட்டதால் வருமான மதிப்பீடு தயாரித்தல் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வேன் | வருமான மதிப்பீடு தயாரித்தலை முறையாக நிறைவேற்ற வேண்டும். |
| II | வீதவரி மற்றும் வரிக்காக பட்டியலிட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் 62 சதவீதம் அளவிலான குறைந்த பெறுமானத்தை எடுத்திருந்தது. ரூபா 3,408,429 ஆன நிலுவை | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வேன் | வருமான சேகரிப்பு முறையாக நிறைவேற்ற வேண்டும். 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் 48 சதவீதம் 3 ஆண்டுகளை விட பழைய மீதிகளாக இருந்தமையால் வருமான அறவீடு செயற்திறனாக நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | | சட்டத்தின் 258 மற்றும் 259 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| III | சபைக்குச் சொந்தமான லொக்ஹில் கொலனி மற்றும் கிறிஸ்லஸ்பாம் இல் உள்ள 30 காணித்துண்டுகளுக்காக குத்தகையாளரால் 13 மாதங்கள் முதல் 38 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா. 109,883 வாடகை செலுத்தப்படவில்லை. கணக்கெடுப்பின் மூலம் குத்தகைதாரர்கள் மற்றும் உரிய காணித்துண்டுகளை முறையாகக் கண்டறிந்து முறையான உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வேன் | வருமான சேகரிப்பு முறையாக நிறைவேற்றப்பட வேண்டியுதடன் உடன்படிக்கையொன் றை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை<br>------------------------- | | |
| | சபைக்குச் சொந்தமாக காணப்படும் 60 கடைகளில் 4 கடைகளின் குத்தகையாளர் களுடன் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்ல. | 03 மாதங்களுக்குள் உடன்படிக்கை மேற்கொண்டு பூர்த்தி செய்வேன் | வருமான சேகரிப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குத்தகையாளர்களுடன் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்<br>----------------------------------------------- | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,799,115 ஆக இருந்தது . | அறவிடப்பட்டு அறிக்கையிடுகின்றேன். | வருமான சேகரிப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட காணிகள் பிரிக்கப்படும் போது வீரீ இற்கு விடுபட்டதன் பின்னர் காணியின் அளவில் 10 சதவீதத்திற்கு குறையாத அளவு பொது மற்றும் பொழுதுபோக்கு பகுதிகளுக்கு பொருத்தமான இடங்களிலிருந்து வழங்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு பகுதிகளாக்கப்பட்ட குடாஓயா கிராம சேவையாளர் பிரிவில் உள்ள குடாஓயா தோட்டத்தின் 2018 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்ட 27.46 பேர்ச் மற்றும் 27.55 பேர்ச் அளவிலான இரண்டு காணித் துண்டுகளும் அவ்வாறு சமூக மற்றும் பொது நோக்கங்களுக்கு பொருத்தமான இடங்களில் அல்லாமல் அதிக சரிவான இடமொன்றிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன் | சமூக மற்றும் பொது நோக்கங்களுக்கு பொருத்தமான இடங்களிலிருந்து காணியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்காக 40 கட்டிட விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 20 மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடல் குழுவை கூட்டி அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயற்திறனாக அங்கீகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) பொதுமக்களால் அளித்த முறைப்பாடுகள்/ பிரதிநிதிகள் பதிவேடுகளுக்கு உட்படுத்தல் மற்றும் அவற்றின் மீது முறையான நடவடிக்கைகளை எடுக்கும் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்ட போதும் அது நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. சபைக்கு மீளாய்வாண்டில் நீர் தொடர்பான பிரச்சினை, காணிப் பிரச்சினை, அனர்த்த நிலைமைகள் போன்றவை தொடர்பில் 95 பொதுமக்கள் முறைப்பாடுகள் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடொன்று இடம்பெறாமல் இருப்பதற்குநவடிக்கை எடுக்கின்றேன். | பதிவேடுகளை நாளதுவரையாக பேணுவதற்கும் பொது மக்கள் முறைப்பாடு தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிடைத்திருந்த போதிலும், 5 முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன. அதன்படி, 90 புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. | | |

3.3 **விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 5,600,000 பெறுமதியான 25.1 பேர்ச் காணியும் வட்டகொட பொது மலசலகூடம் அமைந்துள்ள காணியும் அதற்கான நுழைவு வீதியொன்று இல்லாமையால் விளைவற்று காணப்பட்டது. | இச்சொத்துக்களை சொத்துக்களை எதிர் காலத்தில் பயன்பாட்டிற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை ஆக்க பூர்வமாக வும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 1,745,820 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் வட்டகொட மீன் விற்பனை நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது | இரண்டு முறை கேள்வி கோரிய போதும் கேள்வி சமர்ப்பிக்கப் படவில்லையென அறிய தருகின்றேன் | நிர்மாணம் நோக்கத்திற்குட்பட்ட செயற் பாட்டிற்காக ஈடுபடுத்த வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட வெவ்வேறு அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் நிறைவேற்றப்பட்ட 14 நிர்மாணங் களுக்காக ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு ரூபா 2,634,646 தொகை கொடுப்பனவு செய்வதற்கு இருந்த போதும் நிர்மாண வேலைகளை நிறைவேற்றியமைக்காக சபைக்கு 07 நிர்மாணங்களுக்காக ரூபா 1,078,648 தொகை மாத்திரம் பெறவேண்டியதாக காணப்பட்டதால் ரூபா 1,555,998 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. | எதிர்காலத்தில் இந்நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிய தருகின்றேன் | நிர்மாண வேலைக ளை நிறைவேற்றி பொதுமக்கள் சேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக உள்ளக கணக்காய்வுப் பிரிவில் கடமைகள் மற்றும் ஏனைய விடயங்களின் கடமைகளுக்கும் 2017 ஆம் ஆண்டில் சேவைக்கு சேர்ந்த கணக்காய்வு செயற்பாடுகள் தொடர்பாக பயிற்சியொன்றை பெற்றுக்கொள்ளாத புதிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தருக்கு கையளிக்கப் பட்டமையால் மீளாய்வாண்டில் போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் உத்தியோகத்தரின் சம்பளமாக ரூபா 350,880 தொகை ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ள அறிய தருகின்றேன். | போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2020 ஆம் ஆண்டில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய ஓராண்டில் 1460 தொன் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. சபையின் சுகாதாரப் பிரிவின் உள்ளவாறான செலவினம் ரூபா 10,125,034 ஆக இருந்த போதும் அதில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்தை வேறாக்கி இனங்காண முடியாமல் இருந்தது. வருடாந்தம் உக்கலடையும் கழிவுகள் 912.5 தொன் கழிவுகள் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதுடன் மீள்சுழற்சி செய்யப்பட்ட கழிவுப்பொருள் ஓராண்டிற்கு 365 தொன் அளவில் இருந்தது. சேரும் கழிவுப்பொருள் அளவில் வருடாந்தம் மீள்சுழற்சிக்கு உட்படாத அளவு 182.5 தொன் அளவில் இருந்ததுடன் கலப்பாக கிடைக்கும் இந்த கழிவுப்பொருட்களை பதன கழிவுப்பொருள் தொகுதியின் நிலத்தை நிரப்புவதற்கு பயன்படுத்தப் பட்டிருந்தது. | உரிய குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன் | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதன கழிவுப்பொருள் தொகுதியின் சேதனப் பசளை உற்பத்தியை மேம்படுத்தி அதனை சபையின் வருமான மார்க்கமொன்றாக மாற்றும் இயலுமை காணப்பட்ட போதும் அது தொடர்பாக சபையின் கவனம் செலுத்துதல் குறைந்த மட்டத்தில் இருந்தது. | மேம்படுத்துவதற்காக உத்தியோகத்த ரொருவர் நியமிக்கப் பட்டுள்ளார். | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2000 இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்ப்படுத்தப்படும் பிரமாணங்களுக்கு இணங்க வழங்கப்பட்டுள்ள 2008 சனவரி 25 ஆந் திகதிய இலக்கம் 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்தரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனமொன்றுக்காக 2021 பெப்ரவரி 21 ஆந் திகதி வரை வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் வழங்க நடவடிக்கை எடுப்பேன். | சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |